மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.

முற்பகல் 10-30

திருமதி எஸ். கணிதா சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் எதிரில் இமயமலை நடந்து வந்தால் என் தாயைப் பார்த்து தலை வணங்கும்; வங்காள விரிகுடாவோ என் தாய் நடக்கும் பாதைக்கு மலர் போன்ற விரிப்பாகும்; அகிலம் எல்லாம் உருகிச் சொல்லும் வார்த்தை அம்மா, அம்மா. எம் அம்மாவைத் தவிர மற்றவர்கள் எல்லாம் சும்மா, சும்மா என்று சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். மதுராந்தகம் தொகுதியில் தொழில்முனைவோர்கள் முன்வந்தால் பிரட் தொழிற்சாலை அமைப்பதற்கு மானியம் வழங்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிச் செய்து கொடுக்கும்பட்சத்தில், அது என் தொகுதி மக்களின் வேலைவாய்ப்புக்கும் ஏதுவாக இருக்கும் என்று கூறி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 231, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

231—

புதிய கட்டடம்

***53120—திரு. என்.வி. காமராஜ்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தொகுதியிலுள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2015 செப்டம்பர் 4]

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் என்பது மத்திய அரசின் திட்டம் என்றாலும்கூட, கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் இவ்வலுவலகங்களுக்கு வழங்கப்படும் மாத வாடகையில் 25 சதவிகிதத்தை மாநில அரசின் பங்காக அளிக்க வேண்டும் என்று ஆணையிட்டதன்பேரில், வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் அலுவலகங்களுக்கு நிதி வழங்கப்பட்டு வருகிறது. தற்போது வேதாரண்யம் வட்டாரக் குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் நல்ல முறையில் இயங்கி வருவதால், புதிய கட்டடம் கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.

திரு. என்.வி. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவுச் சுடரே எங்கள் அம்மா, ஆற்றல் அரசே எங்கள் அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) கருணைக் கடலே எங்கள் அம்மா, கனலும் வீரம் எங்கள் அம்மா, எதிரிகளின் சிம்ம சொப்பனமே எங்கள் அம்மா, ஏழை எளியோரின் கருணை மழையே எங்கள் அம்மா, வறண்ட வரலாற்றை வளப்படுத்திய வலிமை அரசே எங்கள் அம்மா, காலத்தை வென்ற காவியத் தாயே எங்கள் அம்மா, தமிழக காவல் தெய்வமே எங்கள் அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) என்றென்றும் முதல்வர்களுக்கெல்லாம் முதல்வர் எங்கள் அம்மா, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் தொகுதி, வேதாரண்யம் ஒன்றியத்தில் 150 குழந்தைகள் வளர்ச்சி மையங்களும், தலைஞாயிறு ஒன்றியத்தில் 80 மையங்களும், ஆக மொத்தம் 230 மையங்கள் சிறப்பாகச் செயல்படுகின்றன. இதில் சொந்தக் கட்டடத்தில் 158 மையங்களும், வாடகைக் கட்டடத்தில் 32 மையங்களும், வாடகை இல்லாமல் 40 மையங்களும் சிறப்பாகச்

செயல்படுகின்றன. வாடகைக் கட்டடத்தில் இயங்கிவருகின்ற மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். வேதாரண்யம் ஒன்றியத்தில் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இதற்குச் சொந்தக் கட்டடமும், தலைஞாயிறு ஒன்றியத்தில் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகக் கட்டடம் மிகவும் பழுதடைந்துள்ளதால், அதற்கு ஒரு புதிய கட்டடமும் கட்டித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் தொடங்குகிறபோது,* one time grant *ஆகப் பணம் கொடுத்த காரணத்தால், உடனடியாகப் புதியதாகச் சொந்தக் கட்டடங்கள் கட்ட முடிந்தது. அதன் பிறகு, மத்திய அரசு வாடகையாக ரூ.3,500/- மட்டுமே வழங்கி வருகிறது. சொந்தமாகக் கட்டடம் கட்டுவதற்கு நிதி ஏதும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. நாகப்பட்டினம் மாவட்டத்தில், நாகப்பட்டினம், திருமருகல், தலைஞாயிறு, குத்தாலம், செம்பனார்கோவில் ஆகிய 5 குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்கள் தற்போது அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. கீழ்வேளூர், கொள்ளிடம், கீழையூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், சீர்காழி, வேதாரண்யம் ஆகிய 7 குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவரின் விருப்புரிமை நிதி என்ற ஒரு நிதி இருக்கின்றது. மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்த நிதியைக் கொண்டு இந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கவனத்துடன் பரிசீலித்து, ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 232, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*